**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 132** **நாள்: 14.06.2025**

**சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, உரிமை, தேவை மற்றும் அனைவருக்கும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கும் விழிப்புணர்வு வட்டமேசை கலந்துரையாடல் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து 04.06.2025 அன்று நடத்திய சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0-வின் ஒரு அங்கமாக, ஊனமுற்றோர்களின் உரிமை, தேவை மற்றும் அனைவருக்கும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கும் விழிப்புணர்வு வட்டமேசை கலந்துரையாடல் இன்று (14.06.2025) பன்முகப்படுத்தப்பட்ட மனித அனுபவமாக இயலாமை (Disability as a diversified human experience) என்ற தலைப்பில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக அலுவலகத்தில் உள்ள அனைத்தும் சாத்தியம் என்ற அருங்காட்சியகத்தில் இன்று (14.06.2025) நடைபெற்றது.

ஊனமுற்றோர் உரிமைகள் செயற்பாட்டாளர் டாக்டர் ஐஸ்வர்யா ராய் அவர்கள் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் பொதுமக்கள் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் என பலரும் பங்கேற்றனர். இந்நிகழ்வில் பாரா விளையாட்டு வீராங்கனை F. மட்டில்டா, ஊனமுற்றோர் உரிமைகள் செயற்பாட்டாளர் R. சுஜாதா, ஊனமுற்றோர்கள் உரிமை ஒருங்கிணைப்பின் உறுப்பினர் R. சதீஷ் குமார், ஹைதராபாத் சென்ட்ரல் பல்கலைக்கழகத்தில் ஆராச்சியாளர் V. விஷ்ணு, மேலாளர் V. லிங்கேஷ், பெட்டர் வேர்ல்ட் ஷெல்டர் ஆகியோர் பேச்சாளர்களாக பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடலில் ஊனமுற்றோர்களின் வேலையிடம், வீடுகள், பொது இடங்கள், பள்ளிகள், கழிப்பறைகள் என்று அவர்கள் சந்திக்கும் சவால்களையும் தினசரி வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்தனர். இந்நிகழ்வில் பேச்சாளர்கள் முதியோர்களின் கழிப்பறை தேவைகள், பாரா விளையாட்டு வீரர்களின் தேவைகள் என்று பலதரப்பட்ட மக்களின் தேவைகளை உள்ளடக்கிய அனைவருக்குமான கழிப்பறைக்கான வடிவமைப்பு அவசியம் என்பதை வலியுறுத்தினர். மேலும் நாம் அனைவரும் ஊனமுற்றோர்களின் உரிமைக்கும் தேவைக்கும் மற்றும் அனைவருக்கும் சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கிட ஒன்றுபட்டு வேலை செய்வதின் அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**